**தலைப்பு 245 – அரச நிதித் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

அரச நிதித் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஆகஸ்ட் 02 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரச நிதித் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீண்டெழும் செலவு விடயமொன்றுக்கு மற்றும் 2 மூலதனச் செலவு விடயங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்தம் ரூபா 1,750,000 ஆன தேறிய ஒதுக்கங்கள் மீளாய்வாண்டில் எவ்வித பயன்பாடுகளுமின்றி முழுமையாகச் சேமிக்கப்பட்டிருந்தது. | கொவிட்-19 தொற்றுநோய் நிலைமையில் வெளிநாட்டுப் பயணங்கள் மட்டுப்படுத்தப்பட்டமையால் அமைச்சரவைப் பத்திரம் 21/1596/304/134 ஆம் இலக்க "அரச செலவுகள் மீளாய்வு" பிரகாரம் செலவுகளை மட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு குறிப்பிடப்பட்டிருந்தமையால் இச்செலவு விடயங்களுக்கான ரூபா 17,500,000 முழுமையான ஒதுக்கங்களையும் நிறுத்தி வைக்குமாறு 2021.09.08 ஆந் திகதி பணிப்பாளர் நாயகம், தேசிய வரவு செலவுத் திட்டத்தினால் அறிவுறுத்தப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியாக மற்றும் யதார்த்தமாக வருடாந்த செலவு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) ஒன்பது மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 3 மூலதன செலவு விடயங்களுக்காக மொத்தம் ரூபா 38,164,000 ஆன மேலதிக ஒதுக்கங்கள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 28,326,231 பயன்படுத்தப்பட்ட பின்னர் ரூபா 9,837,769 ஆன | அமைச்சரவை பத்திர இலக்கம் 21/1596/304/134 ஆன "அரச செலவுகள் மீளாய்வு" எனும் தலைப்பிலான அமைச்சரவை விஞ்ஞாபனம் மற்றும் அதற்கான அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் ரூபா 9,092,890 ஆன | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியாக மற்றும் யதார்த்தமாக வருடாந்த செலவு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டிருந்தன. அச்சேமிப்புக்கள் ஒவ்வொரு செலவு விடயங்களுக்காகவும் ஒதுக்கப்பட்டிருந்த தேறிய ஒதுக்கங்களில் 8 சதவீதம் தொடக்கம் 92 சதவீதம் வரையான வீச்சிலான அளவில் காணப்பட்டது. | ஒதுக்கங்களின் அளவை நிறுத்தி வைக்குமாறு (Freeze) 2021.09.08 ஆந் திகதி பணிப்பாளர் நாயகம், தேசிய வரவு செலவுத் திட்டத்தினால் அறிவுறுத்தப்பட்டிருந்தது. | |
| (இ) | 2021 ஆம் ஆண்டின் காசுப்பாய்ச்சல் கூற்று முதலீட்டு செயற்பாடுகளில் உருவாக்கப்பட்ட பணம், கூற்றில் பணச் செலவுகளின் கீழ் பௌதீகச் சொத்துக்கள் நிர்மாணம் அல்லது கொள்வனவுகள் மற்றும் ஏனைய முதலீடுகளைக் கைப்பற்றலின் கீழ் ரூபா 6,641,072 காட்டப்பட்டிருந்தது திறன் அபிவிருத்திக்காக செலவிடப்பட்ட ரூபா 545,267 ஆன செலவுகளும் உட்படுத்தப்பட்டு ரூபா 7,186,339 ஆன கொடுப்பனவுகள் பௌதீகச் சொத்துக்கள் நிர்மாணம் அல்லது கொள்வனவுகள் மற்றும் ஏனைய முதலீடுகளின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது. | ஏசீஏ-2(ii) அரச முதலீடுகளின் மொத்தச் செலவுகளின் கூட்டுத்தொகையான ரூபா 7,186,339.00 ஆன செலவுகள் அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 2021/03 மூலம் இனங்காணப்பட்ட தொகை காசுப்பாய்ச்சல் கூற்று மாதிரியில் முதலீட்டுச் செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட மொத்த காசுப்பாய்ச்சலின் கீழ் "பௌதீக சொத்துக்கள் நிர்மாணம் அல்லது கொள்வனவுகள் மற்றும் ஏனைய முதலீடுகளைக் கைப்பற்றலின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ள பௌதீகச் சொத்துக்கள் கைப்பற்றலின் பெறுமதி நிதி நிலைமை தொடர்பான கூற்றில் வருடத்தின், நிதி மற்றும் நிதியல்லாச் சொத்துக்கள் கைப்பற்றல் பெறுமதிக்குச் சமமாக இருத்தல் வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

**அவதானிப்புக்கள்**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2010 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனங்களின் எரிபொருள் எரிப்பு பரீட்சிக்கப்பட வேண்டியுள்ள போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரை சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு திணைக்களங்களின் | 30/2016 ஆம் இலக்க 2016.12.29 ஆந் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் குழாம் வாகனங்களின் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு லொக் குறிப்பு புத்தகங்களில் | சுற்றறிக்கையின் பிரகாரம் வாகனங்களின் எரிபொருள் எரிப்பு பரீட்சிக்கப்பட்டு குறிப்பிடப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வாகனங்களின் எரிபொருள் எரிப்பு பரீட்சிக்கப்படவில்லை. | குறிப்பிடப்பட்டுள்ளது. | |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 1645(அ) | கிரமமாக மற்றும் முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட வாகன லொக் குறிப்புக்கள் பேணப்பட வேண்டிய போதிலும், வாகன லொக் புத்தகங்களை பேணப்பட்டு வருவதில் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. | நி.பி 1645(அ) பிரகாரம் வாகன லொக் குறிப்புப் புத்தகங்கள் கிரமமாக மற்றும் முறையாக பூரணப்படுத்தப்பட்டுள்ளது. | குறைபாடுகள் பூரணப்படுத்தப் பட்டு நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

-------------------------------------

**3.1 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் பெறப்படாமை**

--------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டில் நட்டங்களைப் பதிவழித்தல் தொடர்பான 50 கோரிக்கைகள் பெறப்பட்டிருந்ததுடன் அவற்றில் 43 தொடர்பாக மாத்திரம் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டிருந்தன. | இத்திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட நட்டங்கள் பதிவழித்தல் மற்றும் கைவிடுதல்கள் தொடர்பான கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்பட்டு அந்த இழப்புக்கள், நட்டங்கள், கைவிடுதல்கள் அறவிடப்படுவதற்கு மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கை காணப்பட்டால் அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்பட்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு இத்திணைக்களத்திற்கு மீண்டும் சமர்ப்பிக்குமாறு குறிப்பிட்டு உரிய அமைச்சுக்கள் / திணைக்களங்களுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படுவதுடன், குறிப்பிட்ட சம்பவம் தொடர்பாக தீர்க்கப்பட வேண்டிய ஏதேனும் சிக்கல்கள் இருப்பின் அல்லது சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் மேலதிக விசாரணை மேற்கொள்ளப்படும். | திணைக்களத்தின் பிரதான நோக்கங்களை நிறைவேற்றுதல் செயற்திறனாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018 ஆகஸ்ட் 18 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 13 நிதியங்கள் மூடப்படுவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும், அதில் 09 நிதியங்களில் காணப்பட்ட ரூபா 1,769,693,149 ஆனது திறைசேரிக்குப் பெறப்பட்ட பின்னர் அந்நிதியங்கள் மூடப்பட்டு விட்டன. ஏனைய நான்கு நிதியங்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதியின் பணிகள் முடிக்கப்பட்டிருக்கவில்லை. | இரண்டு நிதியங்கள் மீண்டும் நிறுவப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன், இன்னுமொரு நிதியத்திற்கு கடன் மீதிகள் திரும்பப் பெறப்பட வேண்டியிருப்பதால் அக்கடன் மீதித் தொகை திரும்பப் பெறப்பட்டதன் பின்னர் மூடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திணைக்களத்தின் பிரதான பணிகள் நிறைவேற்றப்படுவது தொடர்பாக முறையான திட்டம் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | 2015 வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட அரச நிதி முகாமைத்துவச் சட்ட வரைபுபடுத்தல் மற்றும் ஏற்றுக்கொள்ளல் 2021 திசெம்பர் 31 வரை முடிக்கப்பட்டிருக்கவில்லை. | அரச நிதி முகாமைத்துவச் சட்டம் விரைவுபடுத்தும் பணியை தற்காலிகமாக கைவிடுமாறு திறைசேரிச் செயலாளரின் அறிவுறுத்தல் பெறப்பட்டிருந்ததுடன் 2020.01.20 ஆந் திகதி திறைசேரி செயலாளரின் தலைமையில் நடாத்தப்பட்ட கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் பிரகாரம் கடந்த வருடங்களில் அரச நிதி தொடர்பான சுற்றறிக்கைகள் இரத்துச் செய்யப்பட்டு 2020.08.28 ஆந் திகதிய 01/2020 மற்றும் 02/2020 ஆம் இலக்க சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டிருந்தன. | வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளில் எதிர்பார்க்கப் படுகின்ற நோக்கம் நிறைவேற்றப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. மனிதவள முகாமைத்துவம்**

---

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 திசெம்பர் 31 வரையில் வெற்றிடங்களாக காணப்பட்ட 15 பதவிகளில் 08 பதவிகள் சிரேஷ்ட மட்டத்திலான பதவிகள் ஆகும். | சிரேஷ்ட மட்டத்தில் பதவிகளுக்காக இதுவரை 07 உத்தியோகத்தர்கள் இணைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும், 2022 வருடாந்த இடமாற்றலின் கீழ் இரு சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் இடம் மாற்றப்பட்டிருந்தனர். அத்துடன் தற்போது காணப்படுகின்ற வெற்றிடங்கள் தொடர்பாக நிதி அமைச்சிற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது பதவியணியை திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |